Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, DECEMBER 07, 2023

வியாழக்கிழமை டிசெம்பர் 07, 2023 | ஒளி: 07 கதிர் 144 | பக்கம்:06 | நகரப்பதிப்பு* | Free

## மக்களே உஷார்

அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகள் போன்று காட்டிக் கொண்டு நிதியுதவி வழங்குவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபடும் நபர்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுயதொழில் செய்வதற்கு நிதியுதவி வழங்குவதாகவும் சிறுவர்களுக்கான புத்தகங்களை வழங்குவதாகவும் கூறி பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட பணத்துடன் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



## “மதம், மொழியில் மலினப்படுத்தவில்லை”

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள இந்து மத கலாசாரத்தையும், மத சின்னங்களையும் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்த புத்தசாசன,சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, .அரசாங்கம் மற்றும் அமைச்சு,

தொடர்ச்சி P2

### வடக்கு, கிழக்கில் மட்டும்

## பகவான் ஆக்கிரமிப்பின் சின்னம்



புத்த பகவான் அமைதியின் சின்னமாக பல நாடுகளில் வணக்கப்படும் நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டும் புத்த பகவான் எங்களின் நிலங்களை பறிக்கின்ற எங்களின் மத அடையாளங்களை அழிக்கின்ற, காணி பிடிப்பதற்கான ஆக்கிரமிப்பின் ஒரு அடையாளமாக பயன்படுத்தப்படுகின்றார் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பியான சார்ள்ஸ் நிர்மலநாதன் குற்றஞ்சாட்டினார்.

தொடர்ச்சி P2

## “1890 பிக்குகள் துறவறத்தை துறந்துள்ளனர்”



மனித உரிமைகளுக்கு அப்பாற்பட்டு மதங்கள் செயற்பட்டால் முரண்பாடுகள் தோற்றம் பெறும் .குருந்தூர் மலை விவகாரத்தை பேசி முரண்பாட்டை தூண்டி விடுபவர்கள், கடந்த ஆண்டு மாத்திரம் 1890 பிக்குகள் துறவறத்தை துறந்து விட்டு சென்றுள்ளதை அறியாமல் இருப்பது.

தொடர்ச்சி

## சிறுவன் சடலமாக மீட்பு; மதரஸா நிர்வாகி கைது



அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது சந்தை வீதியில் அமைந்துள்ள 3 மாடி கட்டடம் ஒன்றில் நடாத்தப்படும் மத்ரஸா ஒன்றில் மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பகுதியை சேர்ந்த எம்.எஸ்.முஸ்அப் (வயது-13) மாணவன் தன்னுயிரை மாய்த்துக்கொண்ட நிலையில் செவ்வாய்க்கிழமை (5) இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



## ‘ஸ்பா’ திறந்த விபசார மத்திய நிலையம்

ஸ்பா (மசாஜ் ) நிலையங்கள் அதிகளவில் உருவாக்கப்பட்டுள்ளன. தொழில்வாய்ப்புக்களை இழந்த பெண்கள் பலர் இதில் உள்ளார்கள். ஸ்பா நிலையங்கள் திறந்த விபசார மத்திய நிலையம் என்பதை அனைவரும் அறிவார்கள் என ஐக்கிய மக்கள் குடியரசின் தலைவரும்,எம்.பி.யுமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “வரி விதிப்பு அசாதாரண செயல்”

குழந்தைகளுக்கான போஷாக்குணவுகள், மற்றும் மருத்துவப்பொருட்களுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளமை அரசின் மிகவும் அசாதாரண செயல் என ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யான ஹர்ச டி சில்வா தெரிவித்தார். பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரி வருமானம் அத்தியாவசியம் என்று அரசு கூறுகின்றது. ஆனாலும் வரி அறவிடும் முறையில் சாதாரணத் தன்மை ஒன்று இருக்க வேண்டும் என்று நாங்கள் கூறினோம்.

பிரதானமாகக் குழந்தைகளின் போஷாக்கிற்குத் தேவையான உணவு வகைகள், உரங்கள், டீசல், மருத்துவ பொருட்களுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளது.



தொடர்ச்சி P2

### உயிரிழந்த உறவுகளை நினைவு கூர

## “உரிமையுண்டு மீறமுடியாது”



**தடைச்சட்டமூலம் தொடர்பில் வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு அவர்களின் நிலைப்பாட்டையும் பெற்றுக்கொண்டுள்ளேன். எதிர்வரும் மாதமளவில் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை எடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.**

உயிரிழந்த உறவுகளை நினைவு கூருவதற்கு அனைவருக்கும் உரிமையுண்டு, ஆனால் நீதிமன்றத்தின் உத்தரவை யாரும் மீற முடியாது அவ்வாறு மீறியவர்கள்தான் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவ்வாறு கைது செய்யுமாறு கூட எவரும் கட்டளை பிறப்பிக்கவில்லை. பொலிஸார் தமது கடமையைச் செய்துள்ளார்கள் என நீதி,சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்‌ஷ தெரிவித்தார். பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06 விசேட கூற்றை முன்வைத்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கு 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தொடர்ச்சி P2

## கூட்டத்தொடரை ஒத்திவைக்க முஸ்தீபு

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ,2024 ஜனவரி நடுப்பகுதியில் ஒத்திவைப்பது குறித்து ஆலோசித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டவுடன், சபையின் முன் நிலுவையில் உள்ள அலுவல்கள் காலாவதியாகிவிடும், மேலும் புதிய கூட்டத்தொடர் ஜனாதிபதியால் கூட்டப்படும். ஜனாதிபதி அதிகபட்சமாக இரண்டு மாதங்களுக்குப் பாராளுமன்ற கூட்டத்தொடரை ஒத்திவைக்கலாம். ஒத்திவைப்பை அறிவிக்கும் பிரகடனத்தில்,

தொடர்ச்சி P2

## 14 வருடங்களுக்குப் பின்னர் சிப்பாய்க்கு மரண தண்டனை

ரொசேரியன் லெம்பட்

மன்னார் பரப்புக்கடந்தான் இராணுவ முகாமில் கடந்த 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டின்போது, கடமையில் இருந்த 2 இராணுவ வீரர்கள் உயிரிழந்ததுடன், ஒருவர் காயமடைந்த சம்பவத்துடன் கைது செய்யப்பட்ட இராணுவ சிப்பாய்க்கு 14 வருடங்களின் பின்னர் மன்னார் மேல் நீதிமன்றம் புதன்கிழமை (6) மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

மன்னார் மேல் நீதிமன்றத்தில் விசாரணைகளின் இடம் பெற்று வந்த நிலையில் சுமத்தப்பட்டிருந்த குற்றம் நிரூபிக்கப்பட்டதை அடுத்தே மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## “பழைய முறைகளால் எதிர்காலம் கிடையாது”

அனைத்து துறைகளையும் நவீனமயப்படுத்தி நாட்டை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லும் புதிய பொருளாதார வேலைத்திட்டம் 2024 ஜனவரி முதலாம் திகதி ஆரம்பிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். பழைய முறைகளைத் தொடர்வதன் ஊடாக நாட்டிற்கு எதிர்காலம் கிடையாது எனவும், கடந்த சில வருடங்களில் ஒரு தேசம் என்ற வகையில் நாம் எதிர்கொண்ட கசப்பான அனுபவத்தை எதிர்கால சந்ததியினர் வரை கொண்டு செல்ல முடியாது எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார். எனவே, புதிய பொருளாதார சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்கு அனைவரும் இணைந்து கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## படுகொலை சதித்திட்டம் நாலக டி சில்வா விடுவிப்பு



2019ஆம் ஆண்டு இடம்பெற்ற படுகொலை சதித்திட்டம் தொடர்பான வழக்கிலிருந்து பயங்கரவாத விசாரணைப் பிரிவின் (TID) பிரதி பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வா விடுவிக்கப்பட்டுள்ளார்.

குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான சாட்சியங்கள் போதுமானதாக இல்லை என சட்டமா அதிபர் தெரிவித்ததையடுத்து, கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் பிரதி பொலிஸ் மா அதிபர் இந்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

தொடர்ச்சி P2

## பம்பலப்பிட்டி விவகாரம்: ஐவரும் பிணையில் விடுவிப்பு



பம்பலப்பிட்டியில் பதிவு செய்யப்படாத கல்வி நிறுவனம் ஒன்றின் செயற்பாட்டிற்கு உடந்தையாக இருந்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் ஐவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் புவக்பிட்டிய, பல்லேவெல, தெமட்டகொட, பொலன்னறுவை மற்றும் மத்துகம ஆகிய பிரதேசங்களில் வசிக்கும், 23,25 மற்றும் 26 வயதுடையவர்கள் என தெரியவருகின்றது.

தொடர்ச்சி P2

## “ஆவேசப்பட்ட விஜயதாச ஏன் விமர்சிக்கவில்லை”



**நான் எந்த நீதியரசரினது பெயரைக்குறிப்பிடாதபோதும் எனது பேச்சு தொடர்பில் ஆவேசப்பட்டு நீதிபதிகள் தொடர்பில் பேசும் நீதி அமைச்சர் விஜேதாச, இந்த சபையில் அமைச்சராக இருந்துகொண்டு ரொஷான் ரணசிங்க மேன்முறையீட்டு நீதிபதி தொடர்பாகத் தெரிவித்த விடயங்களை ஏன் விமர்சிக்கவில்லை? என வன்னி மாவட்ட எம்.பி. யுமான ரிஷாத் பதியுதீன் கேள்வி எழுப்பினார். இடைக்கால நிர்வாக சபையை ரொஷான் ரணசிங்க நியமிக்கும்போது இந்த நீதி அமைச்சரின் மகனையும் நியமித்தார் என்பதால்தான் விமர்சிக்கவில்லையா என கேள்வியெழுப்பினார்.**

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# பகவான் ஆக்கிரமிப்பின் சின்னம்

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு என்றபெயரிலேயே அரசு வெளிப்படையாக புத்த மதம் மாத்திரம்தான் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட மாதமாக இருப்பதாக ஏற்றுக்கொள்கின்றது. இலங்கையின் பூர்வீக மதமான இந்து மதம் கூட இந்த வரிசையில் வரவில்லை. ஆகவே இலங்கையைப் பொறுத்தவரையில் புத்த மதத்திற்கு அப்பால் தான் ஏனைய மதங்கள் என்ற செய்தியை இந்த தலைப்பு சொல்லி நிற்கின்றது என்றார்.

நான் இந்தியா உள்ளிட்ட பல நாடுகளுக்கு சென்றுள்ளேன். அங்குள்ள எம்மவர்களின் வீடுகளுக்கும் சென்றுள்ளேன். அங்கு கூட புத்த பகவானை அமைதியின் அடையாளமாக வைத்திருக்கின்றார்கள். இந்து, கத்தோலிக்க மதத்தவர்களும் அப்படித்தான் புத்தரை வைத்திருக்கின்றார்கள் ஆனால் இலங்கையில் புத்தபகவானை தற்போது இலங்கையில் உள்ள ஆட்சியாளர்கள் எவ்வாறு பயன்படுத்துகின்றார்கள் என்று அமைச்சர் சிந்திக்க வேண்டும்.

வடக்கு,கிழக்கு மாகாணங்களை பொறுத்தவரையில் எங்களின் நிலங்களை பறிக்கின்ற ,எங்களின் மத அடையாளங்களை அழிக்கின்ற ஒரு ஆக்கிரமிப்பின் அடையாளமாக புத்தபகவானை பயன்படுத்த்துகின்றனர். வெளிப்படையாக கூறுவதானால் காணி பிடிப்பதற்கு புத்த பகவானை பயன்படுத்த்துகின்றனர். இது ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும் என்றார்.

# மக்களே உஷார்

அமைப்பில் உறுப்பினராகச் சேர மக்களிடமிருந்து கட்டணமாக ரூ.600 வசூலித்துள்ளதுடன், அரச சார்பற்ற நிறுவன அதிகாரியாகத் தன்னைக் காட்டி மக்களுக்கு நிதியுதவி வழங்குவதாக உறுதியளித்தமைக்காக சியம்பலாண்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய பெண் ஒருவர் முதலில் கைது செய்யப்பட்டுள்ளார்.

உறுப்பினர் கட்டணம் என ஏமாற்றி வசூலித்த ரூ. 26,000 பணத்துடன் அத்திமலே, கெமுனுபுர பிரதேசத்தில் வைத்து செவ்வாய்க்கிழமை (05) குறித்த பெண் கைது செய்யப்பட்டதுடன், அவர் கூட்டுறவு கிராம வங்கியில் பொதுமக்களை ஏமாற்றி ரூ. 136,000 பெற்று அதை வங்கியில் வைப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# “மதம், மொழியில் மலினப்படுத்தவில்லை”

மதம் மற்றும் மொழி அடிப்படையில் எவரையும் மலினப்படுத்தவில்லை என்றார்.

“பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று அரசியலமைப்பின் 9 ஆவது உறுப்புரிமையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளை, ஏனைய மதங்களை இரண்டாம் பட்சமாக்க வேண்டும் என்று எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை” என்றார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, ,சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சுக்கான செலவினத் தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தொன்மை வாய்ந்த இந்து கோயில்களை புனரமைக்க உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இந்து மத விவகாரங்கள் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.அபிவிருத்தி பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் உள்ள இரண்டு கோயில்களின் கலை சிற்பங்களில் விசேட இலட்சினங்கள் இருப்பதை அவதானிக்க முடிகிறது. அந்த இலட்சினங்கள் பிற கோயில்களில் இல்லை.ஆகவே இந்த ஆண்டுக்குள் இந்த கோயில்கள் இரண்டும் புனரமைக்கப்பட்டு,பக்தர்களின் வழிபாடுகளுக்காக விடப்படும்.

இந்து மத கலாசாரத்தையும்,மத சின்னங்களையும் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தமிழர்களை நாங்கள் புறக்கணிக்கவில்லை,புறக்கணிக்கப் போவதுமில்லை என்றார்.

# “வரி விதிப்பு அசாதாரண செயல்”

> **குழந்தைகளுக்கான போஷாக்குணவுகள் மற்றும் மருத்துவப் பொருட்களுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளமை அரசின் மிகவும் அசாதாரண செயல்**

அரச மருத்துவமனைகளுக்குப் பொருட்கள் கொண்டு வரப்படும் போது அதற்கான முழு செலவையும் அரசாங்கம் ஏற்கும்.

தற்போது தனியார் மருத்துவமனைகளுக்குப் பணக்காரர், ஏழைகள் என அனைவரும் செல்கின்றார்கள். ஏனெனில் மருத்துவ உபகரணங்கள் இல்லாமையால் அரச மருத்துவமனைகளில் அதிகமான பரிசோதனைகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன.ஆகவே தனியார் மருத்துவமனைகளிலேயே பரிசோதனைகளைச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது

இவ்வாறான நிலையில் குழந்தைகளுக்கான போஷாக்குணவுகள், மற்றும் மருத்துவப்பொருட்களுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளமை அரசின் மிகவும் அசாதாரண செயல் என்றார்.

# “உரிமையுண்டு மீறமுடியாது”

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி, புதிய சட்டத்தை உருவாக்க முன்வைக்கப்பட்ட சட்ட நகலை ஒரு தரப்பினர் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தினார்கள். இவ்வாறான நிலையில் 2019.ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டது. தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குப் பயங்கரவாத தடைச்சட்டம் அப்போது கடுமையாகப் பயன்படுத்தப்பட்டது.

தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது ஆட்சியாளர்களின் பொறுப்பு நாட்டு மக்களின் உயிரைப் பாதுகாப்பதற்காகவே பயங்கரவாத தடைச்சட்டம் அமுல்படுத்தப்பட்டது. பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் வலுப்பெற்றது.இவ்வாறான நிலையில் கடந்த ஆண்டு முதல் உத்தேச பயங்கரவாத தடைச்சட்டமூலத்தை சமர்ப்பித்தேன், அந்த சட்டமூலம் தொடர்பில் ஆளும் மற்றும் எதிர்தரப்பினர் மாறுப்பட்ட கருத்துக்களை முன்வைத்ததால் அதனை வாபஸ் பெற்று முதல் நகலை திருத்தம் செய்ய நடவடிக்கைகளை முன்னெடுத்தேன்.

உத்தேச பயங்கரவாத தடைச்சட்டமூலம் தொடர்பில் வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் பேச்சுவாரத்தையில் ஈடுபட்டு அவர்களின் நிலைப்பாட்டையும் பெற்றுக்கொண்டுள்ளேன். எதிர்வரும் மாதமளவில் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை எடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக இரத்து செய்ய வேண்டும் என சுமந்திரன் எம்பி குறிப்பிடுகிறார்.

ஆனால் அவரை கொலை செய்ய முயற்சித்தவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ்தான் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு.நாம் அனைவரும் மனிதர்கள். ஆகவே உறவுகளின் முக்கியத்துவத்தை மதிக்க வேண்டும். ஆனால், தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பின் பெயர், இலட்சினைகள் ஆகியவற்றை பயன்படுத்த முடியாது.

அண்மையில் இடம்பெற்ற நினைவேந்தல் தினத்தன்று நீதிமன்றத்தின் உத்தரவை மீறி செயற்பட்டவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களை கைது செய்வதற்கு எவரும் கட்டளை பிறப்பிக்கவில்லை அது பொலிஸாரின் பொறுப்பு. இவ்விடயத்தின் நான் என்ன செய்ய முடியும் என்றார்.

# “1890 பிக்குகள்...

வேடிக்கையாகவுள்ளதென ஐக்கிய மக்கள் குடியரசின் தலைவரும் எம்.பி.யுமான பாட்டலி சம்பிக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகள் தொடர்பில் காலம் காலமாகப் பேசப்படுகிறது. குருந்தூர் மலை ஒரு இனத்துக்கோ அல்லது மதத்துக்கோ சொந்தமானதல்ல ,ஒட்டுமொத்த மக்களுக்கும் சொந்தமானது. இந்த விவகாரத்தை ஜெருசலேம் அளவுக்கு கொண்டு செல்லாமல் பேச்சுவார்த்தை ஊடாக தீர்வு காண வேண்டும்.மனித உரிமைகளுக்கு அப்பாற்பட்டு மதங்கள் செயற்பட்டால் முரண்பாடுகள் தோற்றம் பெறும். என்றார்.

# சிறுவன் சடலமாக...

மத்ரஸாவில் மஹ்ரீப் தொழுகையில், அந்த மாணவன் காணப்படாததால் சில மாணவர்கள் அவரை தேடியபோது மலசலக் கூடத்தில் தன்னுயிரை மாய்த்துக்கொண்ட நிலையில் மீட்கப்பட்டு, சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

இதேவேளை மரணமடைந்த மாணவனின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் உயிரை மாய்த்துக்கொள்வதற்கு எமது பிள்ளை கோழையல்ல எனவும் இச்சம்பவம் தொடர்பில் முறையான விசாரணை அவசியம் எனவும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து மத்ரஸாவினை சுற்றி பொதுமக்கள் குவிந்தமையினால் சாய்ந்தமருது பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்துள்ளனர்.

மேலும் குறித்த மாணவனின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகப் பொதுமக்கள் ஒன்று கூடி குறிப்பிட்ட மதர்ஸாவின் நிர்வாகி மீது தாக்குதல் மேற்கொள்ளத் தயாராகிய நிலையில் சாய்ந்தமருது பொலிஸாரால் மதரஸா நிர்வாகியாகிய மௌலவி கைது செய்யப்பட்டுள்ளனர்.

# ‘ஸ்பா’ திறந்த விபசார மத்திய நிலையம்

2024 ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட்ட முன்மொழிவுகள் ஊடாக 2000 பில்லியன் ரூபா வரி வருமானத்தைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் உத்தேசித்துள்ளது. அதே போல் அடுத்த ஆண்டு தனி நபர் ஒருவர் 1 இலட்சம் ரூபாவை இழப்பதுடன்,அவரிடமிருந்து 1 இலட்சம் ரூபா வரி வருமானத்தைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. வரி கொள்கையினால் மக்கள் இரு முனைகளிலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பொருளாதார நெருக்கடி நிலைக்கு மத்தியில் நாட்டில் கறுப்பு பொருளாதார நிலைமை தோற்றம் பெற்றுள்ளது.இரவு பொருளாதாரத்தை அமுல்படுத்த வேண்டும் என்று பாராளுமன்றத்தில் குறிப்பிடும் தரப்பினர்கள் பெண் உரிமைகள் பற்றியும் பேசுகிறார்கள்.

பத்தரமுல்லை,மஹரகம மற்றும் பன்னிப்பிட்ட ஆகிய பகுதிகளில் தற்போது ஸ்பா எனப்படும் மசாஜ் நிலையங்கள் புதிதாகத் தோற்றம் பெற்றுள்ளன.இதற்கு யார் அனுமதி கொடுத்தது?பொருளாதார பாதிப்பினால் அரச மற்றும் தனியார் தரப்பிலிருந்து நீக்கப்பட்ட பெண்கள் பலர் இந்த நிலையங்களில் சேவையில் உள்ளார்கள்.ஸ்பாக்கல் ‘ திறந்த விபசார மத்திய நிலையங்கள்’ என்பதை அனைவரும் அறிவோம் என்றார்.

# “பழைய முறைகளால் எதிர்காலம் கிடையாது”

> **வங்குரோத்து நிலையை அடைந்த நாடுகளின் பட்டியலிலிருந்து இலங்கை விரைவாக மீண்டு வர முடிந்துள்ளதாக உலக நிதி நிறுவனங்கள் கூட ஒப்புக்கொள்கின்றன**

பிடகோட்டையிலுள்ள சோலிஸ் ஹோட்டலில் புதன்கிழமை(06) இடம்பெற்ற அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

வங்குரோத்து நிலையில் 18 மாதங்களில் நாட்டை மீட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதற்கு அரச நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் ஊழியர் சமூகம் மேற்கொண்டுள்ள பணிகளைப் பாராட்டிய ஜனாதிபதி, நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையைச் சரியான முறையில் நிர்வகிக்காவிட்டால் மீண்டும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிடும் எனவும் சுட்டிக்காட்டினார்.

அடுத்த தசாப்தத்தில். எனவே, தற்போது நிலையான பொருளாதாரத்தை டிஜிட்டல் பொருளாதாரத்திற்குக் கொண்டு செல்ல புதிய திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் எனவும் அதில் நவீன பொருளாதார முறைகளைப் பயன்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

உலகப் பொருளாதார வீழ்ச்சியின் பின்னணியில் வங்குரோத்து நிலையை அடைந்த நாடுகளின் பட்டியலிலிருந்து இலங்கை விரைவாக மீண்டு வர முடிந்துள்ளதாக உலக நிதி நிறுவனங்கள் கூட ஒப்புக்கொள்கின்றன என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்தார்.

# கூட்டத்தொடரை ஒத்திவைக்க முஸ்தீபு

பாராளுமன்றத்தை கூட்டுவதற்கான புதிய திகதியை அறிவிக்க வேண்டும். ஒரு ஒத்திவைப்பு முடிவில், மற்ற புதிய அமர்வு தொடங்குவதுடன் அது ஜனாதிபதியால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்படும்.

அரசியலமைப்பின் 33 வது பிரிவின் பத்தி (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி அரசாங்க கொள்கை அறிக்கையை வெளியிட அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. ஒத்திவைக்கப்பட்டதைத் தொடர்ந்து, பொது நிறுவனங்களுக்கான குழு (COPE) மற்றும் பொதுக் கணக்குகளுக்கான குழு (COPA) உள்ளிட்ட குழுக்கள் செயல்படுவதை நிறுத்த வேண்டும். தற்போது குற்றச்சாட்டுகளுக்கு ள்ளாகியுள்ள கோப் குழுத் தலைவர் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டாரவிற்கு பதிலாக புதிய கோப் குழுவின் தலைவரை நியமிப்பதற்கு வழிவகை செய்வதே இந்த ஒத்திவைப்பிற்கான நோக்கம் என உள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கோப் தலைவரான பேராசிரியர் பண்டார, ஸ்ரீ லங்கா கிரிக்கெட்டின் நலன்களுக்கு முரண்பட்ட வகையில் செயற்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

கண்டி கிரிக்கெட் வளாகம் அமைக்கும் திட்டத்திற்கு பேராசிரியர் பண்டார ஸ்ரீ லங்கா கிரிக்கெட்டின் ஆலோசகராக இருந்ததாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சாட்டினார்.

கோப் குழுவானது பேராசிரியர் பண்டாரவுடன் ஸ்ரீ லங்கா கிரிக்கெட்டின் விவகாரங்கள் குறித்து விவாதிக்க முடிவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

# படுகொலை சதித்திட்டம்...

2018 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரைக் கொல்ல சதித்திட்டம் தீட்டிய குற்றச்சாட்டில் நாலக டி சில்வா கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இதன்போது, நாலக்க டி சில்வா படுகொலைச் சதித்திட்டத்துடன் தொடர்புடையவர் என்பதை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் இருப்பதாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றில் தெரிவித்திருந்தது.

# 14 வருடங்களுக்குப் பின்னர் சிப்பாய்க்கு மரண தண்டனை

மன்னார் பரப்புக்கடந்தான் இராணுவ முகாமில் 02 ஒக்டோபர் 2009 அன்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இராணுவ சேவையில் இருந்த போது இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு, ஒருவர் படுகாயமடைந்தார்.

முருங்கன் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, தீர்ப்புக்காக மன்னார் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எம்.எம்.மிகால் முன்னிலையில் புதன்கிழமை (06) எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது இரண்டு மனிதப் படுகொலை செய்யப்பட்டமை உறுதி செய்யப்பட்ட நிலையில் மேல் நீதிமன்ற நீதிபதியால் குறித்த இராணுவ சிப்பாய்க்கு மரண தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது.

மேல் நீதிமன்றத்தின் அனைத்து மின் விளக்குகள் அணைக்கப்பட்டு நீதிமன்றத்தின் கதவுகள் பூட்டப்பட்டுத் தீர்ப்பு எழுதப்பட்டது. எழுதப்பட்டதன் பின்னர் எழுதப்பட்ட பேனா நீதிபதியால் உடைக்கப்பட்டது.

குற்றவாளியான மரண தண்டனை விதிக்கப்பட்டவரை கண்டி- போகம்பரை சிறைச்சாலைக்கு அனுப்பும்படி கட்டளையிடப்பட்டது.

# “ஆவேசப்பட்ட விஜயதாச ஏன் விமர்சிக்கவில்லை”

“ நீதியரசர் நவாஸுக்கு சாபமிட்ட ரிஷாத் பதியுதீன், பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டுமென திங்கட்கிழமை நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ சபையில் தெரிவித்த விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) விசேட கூற்றொன்றை முன்வைத்தே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

எனது உரையில் நான் எந்த நீதிபதிகளின் பெயரையும் குறிப்பிட வில்லை. அத்துடன் எந்தவொரு நீதிபதியும் தீர்ப்பொன்றை வழங்கும்போது அதற்கு அந்த நீதிபதியின் இனம்,மதம் தடையாக இருக்க முடியாது என்றே எனது பேச்சில் தெரிவித்திருந்தேன். நாட்டில் நேர்மையாக இருந்து தீர்ப்பு வழங்கக்கூடிய நீதிபதிகளும் இருக்கின்றனர். அவர்களுக்கு மரியாதை செய்கிறேன்.

மேலும், இந்த சபையில் பலரும் நீதிபதிகளின் பெயர் குறிப்பிட்டு விமர்சித்திருக்கின்றனர். அப்போதேல்லாம் அமைச்சர் விஜேதாச இதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றார்.

# பம்பலப்பிட்டி விவகாரம்: ஐவரும் பிணையில் விடுவிப்பு

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் புதுக்கடை நீதிமன்றில் புதன்கிழமை (06) ஆஜர்படுத்தப்படுத்திய போது, தலா ஒரு இலட்ச ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

“Evolve College of Education” என்ற பெயரில் இயங்கிய குறித்த கல்வி நிறுவனம் பம்பலப்பிட்டி லொரீஸ் வீதியில் அமைந்துள்ளதோடு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு தேவையான டிப்ளோமாக்கள் மற்றும் உயர் டிப்ளோமாக்கள் போன்ற கல்வித் தகைமைகளை வழங்குவதாக சமூக ஊடகங்களில் விளம்பரம் செய்திருந்தது.

இதேவேளை, அந்த போலி கல்வி நிறுவனத்தின் பணிப்பாளராக செயற்பட்ட கிரியுல்ல நாரங்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய பெண்ணொருவரும் கைதுசெய்யப்பட்டு, பின்னர் இலட்ச ரூபாய் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

# இரு விவகாரங்களில் கவனம் செலுத்தவும்



## ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளரிடம் ரிஷாட் பதியுதீன் வலியுறுத்து

பலஸ்தீன மக்களின் அவல நிலை மற்றும் இலங்கையில் நீண்டகால இடம்பெயர்ந்தோரின் மீள்குடியேற்றம் தொடர்பில், ஐக்கிய நாடுகள் சபை தீவிரமாக கவனஞ்செலுத்த வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளரை ஐ.நா தூதரகத்தில் செவ்வாய்க்கிழமை (05) சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். ஒருங்கிணைப்பாளரை ஐ.நா தூதரகத்தில் செவ்வாய்க்கிழமை (05) சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளரை சந்தித்ததில் மகிழ்ச்சியடைகின்றேன். பலஸ்தீனின் அவல நிலை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து இங்கு கலந்துரையாடினோம். பலஸ்தீன் இஸ்ரேல் மோதலை உடன் நிறுத்தும் வகையில், ஐ.நா. நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கூறி, 159 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு அனுப்பிய மகஜர் உரியவர்களிடம் சென்றடைந்துள்ளதாக வதிவிட ஒருங்கிணைப்பாளர் உறுதிப்படுத்தினார். அத்துடன், இலங்கையில் நீண்டகால இடம்பெயர்ந்தோரின் மீள்குடியேற்றத்துக்கு எதிர்காலத்தில் ஐ.நா.வின் ஆதரவு குறித்தும் சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வெறுப்புப் பேச்சுக்கள் பற்றியும் இருவரும் கலந்துரையாடினோம்" என்றார்.



# வைத்தியசாலைக்கு ஜப்பான் உதவி




ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு மருத்துவ சாதனங்களை இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி புதன்கிழமை (06) கையளித்தார்.

இந்நிகழ்வில் சுகாதாரத்துறை அமைச்சர் கலாநிதி. ரமேஷ் பத்திரன மற்றும் சுகாதாரத்துறை இராஜாங்க அமைச்சர் கலாநிதி. சீதா அரம்பேபொல ஆகியோர் கலந்து கொண்டனர். இரு நாடுகளுக்குமிடையிலான ஆழமான பந்தத்தை உறுதி செய்யும் வகையிலும், இலங்கையின் சுகாதார பராமரிப்பு உட்கட்டமைப்பை உறுதி செய்யும் வகையிலும் இந்த அன்பளிப்பு அமைந்திருந்தது. அதனூடாக வைத்தியசாலையினால் தரமான சுகாதார பராமரிப்பு சேவைகளை பெற்றுக்கொடுக்கும் ஆற்றல் மேம்படுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறு அன்பளிப்பு செய்யப்பட்ட சாதனங்களில் மயக்கமருந்தளிக்கும் பகுதி, தன்னியக்கமயப்படுத்தப்பட்ட ரிபரக்டோமீற்றர், மூன்று தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகள், மீட்டல் படுக்கை, மூன்று Slit விளக்குகள், படுக்கை அருகில் பேணப்படும் ஐந்து கண்காணிப்பான்கள் மற்றும் ஒரு சத்திர சிகிச்சை சாதன தொகுதி போன்றன அடங்கியிருந்தன.

# போதையில் இடையூறு விளைவித்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு பிணை

■ எஸ். தில்லைநாதன்

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தின் வழக்கு விசாரணையில் மது போதையில் வந்து விசாரணைக்கு இடையூறு செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் துன்னாலையை சேர்ந்த குறித்த பொலிஸ் பொலிஸ் உத்தியோகத்தர், அவரின் சகோதரியின் மகனுக்கு எதிராக நிலுவையில் உள்ள வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, நீதிமன்றத்துக்கு வந்து, பார்வையாளராக அமர்ந்திருந்துள்ளார்.

இதன்போது, அவர் வைத்திருந்த திறப்பு ஒன்று கீழே விழுந்து அதிக சத்தம் எழுப்பியுள்ளது. அதன்போது, அருகில் நின்ற நீதிமன்ற உத்தியோகத்தர் ஒருவர் அங்கு சென்று திறப்பை எடுக்க முற்பட்டபோது, மது வாடை வீசியுள்ளதையடுத்து அவரை அழைத்து விசாரித்தபோது அவர் பொலிஸ் உத்தியோகத்தர் என்பது தெரிய வந்ததுள்ளது.

பின்னர் அவரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியபோது, அவரை செவ்வாய்க்கிழமை (05) வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை (05) நீதிமன்றில் மீண்டும் முற்படுத்தப்பட்போது மருத்துவ அறிக்கையிலும் அவர் மது அருந்தியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவரை ஒரு இலட்சம் ரூபாய் பிணையில் விடுவித்த நீதிவான், 2024 பெப்ரவரி 22ஆம் திகதிக்கு வழக்கை ஒத்தி வைத்துள்ளார்.

# ஹெலியில் பறந்த சுற்றுலா பயணிகள்

■ எஸ். தில்லைநாதன

ஹெலி ஒன்றை வாடகைக்கு அமர்த்தி வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நெடுந்தீவுக்கு சென்று பார்வையிட்டு திரும்பியுள்ளனர்.

நெடுந்தீவில் உள்ள தனியார் சுற்றுலாத்துறை நிறுவனமொன்றின் ஏற்பாட்டிலேயே குறித்த சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதுடன், நெடுந்தீவின் சுற்றுலாத் துறையில் முதன்மையாக ஒரு சிறந்த முன்னேற்றப்படிக் கல்லாக இவ்வருகை அமைந்திருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கலப்பைக்குள் சிக்கிய சிறுவன் உயிரிழப்பு

■ செ.கீதாஞ்சன்

வவுனியா, நெடுங்கேணி பிரதேசத்தில் வீட்டில் உழவு இயந்திரத்தின் கலப்பைக்குள் சிக்குண்ட மூன்றரை வயது சிறுவனான சிவலோகநாதன் விந்துஜன் உயிரிழந்துள்ளார்.

பனையாண்டான், நெடுங்கேணியினை சேர்ந்த மூன்றரை



வயதுடைய சிறுவன் வீட்டுக்காணியினை உழவு செய்துகொண்டிருந்த போது உழவு இயந்திரத்தின் கலப்பைக்குள் கடந்த 21.11.2023 அன்று சிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த சிறுவன், அருகில் உள்ள மருத்துவமனை கொண்டுசெல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதான மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் திங்கட்கிழமை (04) உயிரிழந்துள்ளார்.

# மட்டு. டிப்போவில் 4 இடங்களில் குடம்பி



■ ரீ.எல்.ஜவ்பர்கான்

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவினருடன் இணைந்து மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை சுகாதார அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில், மட்டக்களப்பு இலங்கை போக்குவரத்து சபை டிப்போ வளாகத்தில் நான்கு இடங்களில் டெங்கு குடம்பிகள் இருந்தமை கண்டுபிடிக்கப்

பட்டுள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு பணிப்பாளர் டாக்டர் நளின் ஆரியரத்தின தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் மாநகர சபை உட்பட பல நிறுவனங்களின் பொதுச்சுகாதார பரிசோதகர்கள், வைத்திய அதிகாரிகள் இணைந்து இப் பரிசோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

# வித்தைக்காரர் ஐஸுடன் கைது

■ அப்துல்கலாம் யாசீம்

திருகோணமலை - கிண்ணியா பகுதியைச் சேர்ந்த மாயாஜால வித்தைக்காரரை ஐஸ் போதைப்பொருளுடன்

செவ்வாய்க்கிழமை (05) கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து அரச பேருந்தில் ஐஸ் போதைப்பொருளைக் கொண்டு வருவதாகக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாகப் பாலம் போட்டாறு பொலிஸ் சோதனை சாவடியில் குறித்த சந்தேக நபரிடம் இருந்து 11 கிராம் 120 மில்லி கிரேம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப் பட்டதாகவும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கிண்ணியா- குட்டிக்கராச்சி

பகுதியைச் சேர்ந்த மாயாஜால வித்தைக்காரர் (30 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேகநபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணை செய்து வருவதுடன், விசாரணையின் பின்னர் திருகோணமலை நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

# வாள்வெட்டு குழுவில் ஒருவர் ஹயஸுடன் கைது

■ செ.கீதாஞ்சன்

யாழ்ப்பாணம் - தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் திங்கட்கிழமை (04) இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் தொடர்புடைய முக்கிய நபர் ஹயஸ் வாகனத்துடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தன்று ஹயஸ் வாகனத்தில் வந்த இனந்தெரியாத குழு, மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் மீது சரமாரியாக வாள்வெட்டு தாக்குதலை நடத்தியுள்ளனர். இதில் காயமடைந்த இளைஞன், தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், வாள்வெட்டு குழுவினரை பிடிப்பதற்காக பொலிஸார் துப்பாக்கிசூடும் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஈரமான பீடி இலைகள் மீட்பு



■ ரஸீன் ரஸ்மீன்

கற்பிட்டி - கீரிமுந்தல் களப்பு பகுதியில் சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட ஒருதொகை பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இச் சம்பவத்தில் எவரும் கைது செய்யப்படவில்லை என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் விஜய கடற்படையினரால் கீரிமுந்தல் களப்பு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் களப்பு பகுதியில் சந்தேகத்திற்கிடமான 8 மூடைகள் காணப்பட்டுள்ளதுடன், அந்த மூடைகளைச் சோதனையிட்ட போது அதிலிருந்து 465 கிலோ கிராம் ஈரமான பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்தனர்.

இலங்கைக்குச் சொந்தமான கடல் மற்றும் கரையோர பகுதியில் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில் இலங்கை கடற்படையினர் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தொழிலாளர்கள் தேவை

தையல் கலைஞர் (ஆண், பெண்), உதவியாளர் (பெண்), ஷோ ரூம் பராமரிப்பாளர் (பெண்) தேவை.
இலக்கம் 1 & 3 (1D), சின்சபா வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06,
தொடர்புகளுக்கு: 0777340758
அறை: 0765637235

## கம்பஹா பிரதேச சபை

### வாடகை அடிப்படையில் டபல் கெப் ரக வண்டியை பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக் கோரல்

### கொள்முதல் இலக்கம் – DS/06/2023

கம்பஹா பிரதேச சபை அலுவலக வேலைகளுக்காக 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.06.30 ஆம் திகதி வரை 4WD வகையான டபல் கெப் வண்டி வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு அனுமதிபெற்ற வழங்குனர்களிடம் இருந்து விலைமனு கோரப்படுகின்றன.

02. அது சம்பந்தமான விபரங்களை www.gampha.ps.gov.lk என்ற கம்பஹா பிரதேச சபை இனைய தளத்தில் அனுகுவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

03. குறிப்பிடப்பட்ட வாடகை வண்டியானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் இருத்தல் வேண்டும்.

• 2015 – 2020 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட உற்பத்தி செய்யப்பட்ட 2450 CC – 3000 CC இடையே எஞ்சின் திறன் கொண்ட உலகப் புகழ்பெற்ற வர்த்தக நாமம் உடைய மாடலாக இருத்தல் வேண்டும்.

04. 2023.12.06 ஆம் திகதி முதல் 2023.12.27 ஆம் திகதி வரை மு.ப 09.00 மணி முதல் பி.ப 03.00 மணி வரையுள்ள காலப்பகுதியில் மீள் வழங்கப்படாத ரூ. 1000.00 (ஆயிரம் ரூபாய்) கட்டணத்தை பணமாக செலுத்தி விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் அபிவிருத்திப் பிரிவிலிருந்து ஏல ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் மேலும் மேலதிக விபரங்களுக்கு 033-2220145 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

05. ஏலப் பாதுகாப்பு தொகையாக ரூ. 25,000.00 (இருபத்தைந்தாயிரம் ரூபா) வை கம்பஹா பிரதேச சபையில் வைப்புச் செய்யப்பட்டு மேற்படி ரசீதுகள் சீல் செய்யப்பட்ட விலைப்பத்திரங்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

06. ஏலங்கள் அசல் மற்றும் நகல் ஆக தயார்செய்து 2023.12.28 ஆம் திகதி அன்று மு.ப 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு "பிரதேச சபையின் செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபையின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளை அமுல்படுத்தும் அதிகாரி, கம்பஹா பிரதேச சபை, மிரிஸ்வத்தை, முதுன்கொட" என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்பிவைத்தல் அல்லது கம்பஹா பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடவும். அசல் மற்றும் நகல் கடிதவுறையில் இட்டு கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "வாடகை அடிப்படையில் டபல் கெப் ரக வண்டி பெற்றுக்கொள்வதற்கான விலைமனு கோரல்" என குறிப்பிடப்பட வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் விலை மனுக்கள் கிராகரிக்கப்படும். விலை மனுக் கோரல்கள் பெற்றுக்கொள்ளும் இறுதி நேரம் முடிவடைந்தவுடன் கம்பஹா பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் வருகைத்தந்திருக்கும் ஏலதாரர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் விண்ணப்பங்கள் திறக்கப்படும்.

07. இந்த ஏலங்களை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் உள்ளூராட்சி மன்றத்தின் கொள்முதல் குழுவிடம் உள்ளது.

**எஸ்.ஏ.என்.பீ. சூரவீர**
**பிரதேச சபையின் செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபையின் அதிகாரங்கள், கடமைகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரி**
**கம்பஹா பிரதேச சபை, மிரிஸ்வத்த, முதுன்கொட.**
**2023.12.05**

# ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்களும் இருப்பர்

என்னதான் விஞ்ஞான உலகத்துக்குள் வாழ்ந்து கொண்டிருந்தாலும், ஏமாற்றுபவர்கள் ஒருசில நொடிகளில் ஏமாற்றிவிட்டு, பெருந்தொகைக்கு ஏப்பம் விட்டுச் சென்றுவிடுகின்றனர். ஏமாந்தவர்கள், இழந்துவிட்டதை எண்ணி, சதாகாலமும் வேதனையடைவதே எஞ்சியுள்ளது.

ஏமாற்றமடைந்தவர்கள் பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று முறைப்பாடு செய்தாலும், ஒருசில சம்பவங்களைத் தவிர, ஏனைய சம்பவங்கள் தொடர்பில் எவருமே சிக்கிக்கொள்வதில்லை. இல்லையேல், நீண்டநாள் தேடுதல் நடவடிக்கைகளின் பின்னர் சிக்கிக்கொள்கின்றனர்.

மேலும், மத்திய கிழக்கு நாடுகளைத் தவிர, மேற்குலக நாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி, இலட்சக்கணக்கில் பணத்தைக் கறந்துவிட்டு, இடையில் கைவிட்டு விடுகின்றனர். இன்றேல், போலியான ஆவணங்களைத் தயாரித்து குடிவரவு- குடியகல்வு அதிகாரிகளிடம் சிக்கவைத்து விடுகின்றனர். இந்த சம்பவத்தில், வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழர்களே பெரும்பாலும் சிக்கிக்கொள்கின்றனர்.

போலியான கடவுச்சீட்டு, போலியான ஆவணங்களுக்காக இலட்சக் கணக்கில் பணத்தை இழந்தவர்கள் அதிகம் என்பதுடன், தொடர்ந்தும் தங்களுடைய முயற்சியைக் கைவிடாது, முயல்பவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். எனினும், சட்டரீதியில் முயற்சிகளை மேற்கொள்வார்களாயின் பெருந்தொகையான பணத்தை இழக்கவேண்டிய நிலைமை ஏற்படாது.

இதற்கிடையே, போலியான கல்விக்கல்லூரிகளை நடத்தி, அப்பாவி மாணவர்களை ஏமாற்றும் குழுவொன்றின் உறுப்பினர்களை பம்பலப்பிட்டிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்குத் தேவையான டிப்ளோமாக்கள் மற்றும் உயர் டிப்ளோமாக்கள் போன்ற கல்வித் தகைமைகளை வழங்குவதாக சமூக ஊடகங்களில் விளம்பரம் செய்தே, இவ்வாறு ஏமாற்றியுள்ளனர் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

எவ்வளவு தொகை செலவழிந்தாலும் பரவாயில்லை. உயர்கல்வியைக் கற்றுவிடவேண்டுமெனத் துடிக்கும் இளைஞர்கள், மிகக்குறுகிய காலத்தில், பட்டத்தை அல்லது டிப்ளோமாக்களை பெற்றுக்கொள்வதற்காகப் பெருந்தொகையில் செலவழித்து ஏமாந்துவிடுகின்றனர். இதற்கு அரசாங்கத்தின் கல்விச் சேவையில் இருக்கும் குறைபாடுகளே பிரதான காரணங்களாக அமைந்துள்ளன.

அரசாங்க பல்கலைக்கழகங்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள், கல்லூரிகளில், குறிப்பிட்ட காலத்துக்குள் நிறைவு செய்யக்கூடிய பாடவிதானங்கள் இருக்குமாயின், வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புகளைத் தேடிக்கொள்வதற்கான பாடவிதானங்கள் இருக்குமாயின், தனியார் உயர்கல்வி நிலையங்களை நாடவேண்டிய தேவை, மாணவர்களுக்கு ஏற்படாது. போலியான கல்விநிறுவனங்களால் ஏமாறவும் மாட்டார்கள்.

விஞ்ஞான உலகத்தில் தொழில்நுட்பத்துறை மிகவேகமாக வளர்ந்துகொண்டே செல்கின்றது. இதனால், மனப்பாடம் செய்தலை பெரும்பாலான மாணவர்கள் விரும்புவதில்லை. மாணவர் பருவம் ஆரம்பித்தது முதல், தொழில்நுட்ப துறை உள்ளிட்ட உலக நாடுகளில் கேள்விகள் இருக்கும் பாடங்களை புகுத்தவேண்டும். இல்லையேல், அவ்வாறான துறைகளைத் தேடியோடும் மாணவர்கள், பெரும்தொகையை இழந்தே நிற்கவேண்டும். ஏனெனில், கல்விப்பட்டம் கொடுப்பதிலும் போலிகள் அதிகரித்துவிட்டன. ஆகையால், எத்துறைகளாக இருந்தாலும் விழிப்பாக இருப்பதே அவசியம்.




## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

என்றும் உவகையுடன் உலகில் வாழ்வது எப்படி எனக் கட்டாயம் அறிய வேண்டும். எப்பொழுதும் சிடு மூஞ்சியடன் இருகாதே என பலர் சொல்வதுண்டு. தங்களின் முகம் எப்படி மாறுகின்றது எதுவெனப் புரிந்து கொள்ளவேண்டும்.

ஒருவர், தனக்கு வேண்டியவர்களுக்கு சொல்லும் வார்த்தைகளைப் புரியாமலே, சினம் கொள்ளும் நபர்கள் ஏராளம். கேட்கும்போது வார்த்தைகளின் அர்த்தம், பற்றி முழுமையாக அறியவேண்டும்.

கண்டத்றகும் ஐயப்படுவது அழகல்ல. உங்களுக்கு ஐயம் ஏற்படி கருத்துக் கூறினால், அது என்னவென சம்பந்தப்பட்டவர்களிடையே அமைதியாக கேட்டு அறிக.

எப்பொழுதும் எல்லோரும் எமக்கு வேண்டப்பட்டவர் எனும் நல் எண்ணத்தை மனதில் இருத்துக. ஒருவரிடம் உதவி கேட்கும் மனப்பான்மையுடன் பழகுவது அழகல்ல. ஒருவரிடம் நட்புப் பூணுவது சுய நலத்துடனானதாக இருக்கலாகாது.

அன்பு தேவையற்ற தவறான ஆராய்ச்சிகளை நிறுத்த வல்லது. பொய்மை இல்லாத பரந்த உணர்வு களிப்பு மிக்கது.

நன்றி: பருத்தியூர் பால- வைரவநாதன்.

# முன்கூட்டிய தயாரிப்பு இல்லாத புதுடெல்லி சந்திப்பு

அ. நிக்ஸன்

ஜே.வி.பியின் அரசியல் கொள்கைகள் ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலைக்கு ஏற்புடையதல்ல. ஆனால், கட்சி அரசியலுக்குரிய அத்தனை பண்புகளையும் ஜே.வி.பியின் அடித்தள உறுப்பினர்கூட பின்பற்றும் ஒழுக்கம் முதன்மை பெறுகின்றது.

கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களைக் கட்சித் தலைமைக்குத் தெரியாமல் சந்திப்பதில்லை. பாராளுமன்ற விவாதங்களில் ஒவ்வொரு விடயதானங்களிலும், தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மாத்திரமே உரையாற்றுவர். எல்லா விடயங்களையும் எல்லா உறுப்பினர்களும் தாம் நினைத்தபாட்டிற்குப் பேச முடியாது. தேர்தலில்கூட போட்டியிடும் உறுப்பினர்கள் கட்சியின் சின்னத்தை மாத்திரமே பிரசாரப்படுத்துவர்.

ஆயுதப் போராட்டம் ஒன்றின் ஊடாக வளர்ச்சியடைந்த கட்சி என்ற கட்டுப்பாடும் ஒழுக்கமும் ஏனைய பிரதான சிங்களக் கட்சிகளைவிடவும் ஜே.வி.பியிடம் புனிதமடைகிறது. ஆனால், எண்பது வருட அரசியல் விடுதலைப் போராட்ட அனுபவம் கொண்ட ஈழத்தமிழ்ச் சமூகத்தின் பழமைக் கட்சியான தமிழரசுக் கட்சியில் “கட்டுப்பாடு” , “ஒழுக்கம்” என்ற முதன்மைப் பண்பு இருப்பதாகத் தெரியவில்லை. ஆயுதப் போராட்டம் நடத்திப் பின்னர் ஜனநாயக வழியில் அரசியலில் ஈடுபடும் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் போன்ற இயக்கங்களிடமும் தத்தமது நோக்கங்களுக்குரிய ஒழுக்கத்தைக் காணவில்லை. மாறாகத் தனித்தனி அரசியல் ஈடுபாடும், இந்திய அரசின் சுழிவு நெளிவுகளுக்கு அமைவாக வியூகங்கள் மாத்திரமே விஞ்சிக் கிடக்கின்றன.

ஒவ்வொரு தமிழ்த் தேசியக் கட்சிகளின் உறுப்பினர்களும் தத்தமது தலைமைக்குத் தெரியாமல் அல்லது தத்தமது கட்சிகளின் மத்தியக் குழுக் கூட்டங்களில் தீர்மானம் அல்லது குறைந்தபட்சம் உரையாடாமல் கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களைத் தனியாகச் சந்திப்பதற்குரிய காரண காரியம் என்ன?

“தமிழ்த் தேசியம்” என்பதைக் கருப் பொருளாகக் கொண்டு தனிநபர் முயற்சியுடன் சில புலம்பெயர் அமைப்புகளின் விருப்பங்கள் தேவைகளுக்கு ஏற்பச் செயற்பட்டு பிரபல்யம் அடைவது மாத்திரமே இங்கு முதன்மை நோக்கமாகிறது.

இதன் மூலம் தத்தமது செல்வாக்குகளை அதிகரித்து இலங்கை ஒற்றையாட்சி அரசின் பாராளுமன்ற ஆசனத்தைக் கைப்பற்றும் தனிப்பட்ட உத்தி என்ற வியூகங்களைத் தவிர ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை என்ற ஒட்டுமொத்த சிந்தனை எவரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை.

வெவ்வேறு கட்சிகளாக இயங்கினாலும் தமிழர் விவகாரத்தைக் கையாள பொதுப் பொறிமுறை ஒன்றை அமைத்து ஒருமித்த குரலில் செயற்பட வேண்டுமென இப்பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் ஆலோசனைகள் பரிந்துரைக்கப்பட்டிருந்தன.

வேறு சில அரசியல் பத்தி எழுத்தாளர்கள் மற்றும் தமிழ்ப் புத்திஜீவிகள் எனப் பலரும் ஒருமித்த குரலில் செயற்பட வேண்டுமென வலியுத்தியுமுள்ளனர்.

குறிப்பாக “வடக்கு கிழக்கு அரசியல் சிவில் புலம்பெயர் அமைப்பு” என்ற பெயரில் சென்ற வாரம் புதுடெல்லிக்குச் சென்ற குழு ஒன்று அங்கு பல சந்திப்புக்களில் ஈடுபட்டுள்ளது.

இக் குழுவில் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறிதரன், க.வி.விக்னேஸ்வரன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் சென்றிருக்கின்றனர்.

ஆகவே, சிறிதரன் இக்குழுவுடன் புதுடெல்லிக்குச் சென்றமை தமிழரசுக் கட்சியின் தலைமைக்குத் தெரிந்திருந்ததா? தமிழர்களின் விவகாரம் பற்றிப் பேசப் போகிறார் என்றால் கட்சியின் மத்தியக் குழுவில் அல்லது கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவுடன் கலந்துரையாடினாரா? அல்லது சிறிதரனைத்தான் இச்சந்திப்புக்கு அனுப்புவது என்று தமிழரசுக் கட்சியின் மத்தியக் குழு தீர்மானம் எடுத்ததா?

அதேபோன்று விக்னேஸ்வரன் தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளர் என்ற முறையில் கூட்டணியின் பிரதிநிதிகளுடன் புதுடெல்லிக்குச் செல்வது பற்றிக் கலந்துரையாடினாரா? வேறு எவரிடமாவது ஆலோசனை பெற்றாரா?

புதுடெல்லிக்குச் செல்வதற்கு முன்னர் சிறிதரனும் விக்னேஸ்வரனும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உட்பட அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் முக்கிய தமிழ்ப் பிரமுகர்கள் எவருடனும் கலந்துரையாடினரா? இக்குழுவில் சென்ற ஏனைய பிறநிதிகள்கூட இது பற்றிச் சிந்தித்தார்களா?

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை இரண்டு அரசுகளும் தத்தமது தேவைக்கு ஏற்ப 2009 இற்குப் பின்னர் அவ்வப்போது மிக இரகசியமாகப் பயன்படுத்தி வரும் நிலையில், அந்த ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கோர இவர்கள் யார் என்று புதுடெல்லி தன் மனதுக்குள் கிண்டலாகக் கேட்டிருக்கும் அல்லவா?

ஆகவே, எண்பது வருட அரசியல் போராட்டத்திற்கான தீர்வு பற்றிய கூட்டுத் தயாரிப்புகள் எதுவுமே இல்லாமல் ஆங்காங்கே குறிப்பிட்ட சில பாராளுமன்ற உறுப்பினர்களையும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரையும் மற்றும் வேறு சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளையும் தனித்தனியாக அழைத்துக் கொண்டு புதுடெல்லிக்குச் சென்றமை நேர்மையான தமிழ்த் தேசிய நிகழ்ச்சி நிரலா?

இந்த வருடம் ஜனவரி மாதம் ஜனநாயகப் போராளிகள் கட்சியும் மற்றும் சில புலம்பெயர் அமைப்புகளின் பிரதிநிதிகளும் புதுடெல்லிக்குச் சென்று ஈழத்தமிழர் விவகாரம் தொடர்பான மாநாடு ஒன்றை நடத்தியிருந்தனர். அந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் பேசப்பட்ட விடயங்கள் பற்றிய தொடர்ச்சி என்ன? வெறுமனே ஒரு மாநாட்டோடு மாத்திரம் அந்த நிகழ்ச்சி நின்று விட்டதா?

அல்லது இந்த மாநாட்டின் தொடர்ச்சியாகத்தான் சென்றவாரம் புதுடெல்லியில் சிறிதரன் விக்னேஸ்வரன் குழுவினர் இந்திய அதிகாரிகளைச் சந்தித்தனரா?

மோடிக்குக் கடிதம் எழுதும் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சட்டத்தரணிகளான சுமந்திரன், கனகஈஸ்வரன் உள்ளிட்ட குழுவினர் அமெரிக்காவுக்குச் சென்று பேச்சு நடத்தியிருந்தனர்.

மீண்டும் கொழும்புக்குத் திரும்பிய சுமந்திரன், “மோடிக்குக் கடிதம்” எழுதும் கூட்டத்தில் பங்குபற்றியிருந்தார். புதிய விடயங்களைக் கடிதத்தில் புகுத்தினார். ஆனால், அந்தக் கடிதத்திற்கு இன்றுவரையும் கிடைத்த பதில் என்ன? அதன் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட அரசியல் வேலைத் திட்டம் என்ன?

2021 ஒகஸ்ட் மாதம் “வட்டுக்கோட்டைத் தீர்மானம் இரண்டு” என்று மாநாடு சென்னையில் இடம்பெற்றது. பழநெடுமாறன், காசி ஆனந்தன் மற்றும் தமிழகத்தின் பிரபல தமிழ்த்துறை சார்ந்த பேராசிரியர்கள், வல்லுநர்கள் பலரும் பங்குபற்றினர். சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு கோரி மோடிக்குக் கடிதமும் அனுப்பியிருந்தனர்.

ஆகவே, இந்த மாநாட்டு முடிவின் தொடர்ச்சியாகவே புதுடெல்லியில் மேற்படி சந்திப்புகள் இடம்பெற்றதா? அல்லது இவை ஒவ்வொன்றும் வெவ்வேறுபட்ட தனித்தனி நிகழ்ச்சி நிரல்களா? ஆனால், ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை பற்றிய பேச்சு என்பது ஒற்றை வார்த்தையில் உள்ளதே!

அதாவது 1958இல் இருந்து 2009 மே மாதம் வரையும் அதன் பின்னரான பௌத்த மயமாக்கல், காணி அபகரிப்புகள் போன்ற தொடர்ச்சிகளைப் பிரதானப்படுத்தி ‘இன அழிப்பு’ என்பதற்கான சர்வதேச விசாரணையை ஒற்றை வார்த்தையில் ஒரு மித்த குரலாக வற்புறுத்தினால் சுயநிர்ணய உரிமைக்கான அங்கீகாரம் இயல்பாக வெளிப்படும்.

ஆகவே, “தமிழ்த்தேசியக் கோட்பாடு” என்பதை “சிதைப்பது” “திசை திருப்புவது” என்ற நச்சுத் திட்டங்கள் மாத்திரமே 2009 இற்குப் பின்னரான சூழலில் பல வடிவங்களில் தொடர்ச்சியாக அரங்கேற்றப்படுகின்றன.

இந்த நிலையில் “இலங்கை அரசு” என்ற கட்டமைப்பைத் திருப்திப்படுத்தித் தமது புவிசார் அரசியல் பொருளாதார நலன்களுக்கு ஏற்ப இந்திய மத்திய அரசு இயங்கி வருகிறது. தமிழர்களின் கூட்டுப் பொறுப்பற்ற அரசியல் செயற்பாடுகளை இந்தியா தமக்கேற்ற முறையில் நன்கு பயன்படுத்தியும் வருகின்றது.

1987இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் போதும் 2009 போரின் போதும் சிங்கள அரசியல் தலைவர்கள் இந்தியாவைத் தமக்கு ஏற்ற முறையில் கையாண்டனர். 2009 மே மாதத்தின் பின்னரான கடந்த பதின் நான்கு வருடங்களிலும் சிங்கள ஆட்சியாளர்கள் இந்தியாவை ஈழுத் தமிழர் பக்கம் சென்றுவிடாமல் காய் நகர்த்துகின்றனர்.

தமிழ் நாட்டையும் புதுடெல்லியின் நிலைப்பாட்டுக்கு ஏற்ப மாற்றியமைக்கும் பல அரசியல் வேலைகளில் மிலிந்த மொறகொட ஈடுபடுகிறார் என்பதைப் புதுடெல்லியில் சந்திப்பு நடத்திய பிரதிநிதிகள் புரிந்துகொள்ளவில்லை என்பதுதான் வேடிக்கை.

புரிந்திருந்தால் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துமாறும் பதின்மூன்றுக்கு ஏற்ப மாகாண சபைத் தேர்தல்களை நடத்துமாறும் புதுடெல்லிச் சந்திப்புகளில் இவர்கள் கோரியிருக்க மாட்டார்கள்.

டில்லியில் நடந்த பல சந்திப்புகளிலும் பிரதமர் மோடியை அல்லது வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரை சந்திக்க எவருக்குமே அனுமதி வழங்கப்படவில்லை.

ஆகவே, மூன்றாம் தரச் சந்திப்புகள்தான் (Third-Class Encounter) இவை. பா.ஜ.க. முகவர்கள் ஊடாக ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்பதும் பகிரங்கமானது.

## கடிதங்கள்

### இருக்கைகளின்றி அசௌகரியம்

யாழ்ப்பாணம்-கோண்டாவில் ரயில் நிலையத்திலுள்ள இருக்கைகள் சேதமடைந்த நிலையில், காணப்படுவதனால், பயணிகள் இருக்கை இன்றி சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மருத்துவ தேவைகள் உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்காக கொழும்பு மற்றும் வெளிமாவட்டங்களுக்கு ரயிலில் பயணிக்க வரும் பயணிகளும் இருக்க இடமின்றி நின்ற நிலையிலையே நீண்ட நேரம் ரயிலுக்காக காத்திருக்கின்றனர்.

நேரம் தாழ்த்தி ரயில் வருவதனால் , நீண்ட நேரம் நிற்க வேண்டிய நிலைமைகள் காணப்படுகின்றன.

கொழும்பு உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வரும் பயணிகள் வாகனங்களுக்கு காத்திருக்கும் போதும் இருக்கைகள் இன்றி சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பில், ரயில்வே திணைக்களம் கவனம் செலுத்தி இருக்கைகளை மீள அமைக்க வேண்டும் காத்திருக்கும் ரயில் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளார்.

எம்.றொசாந்த்



# காத்து நிற்கும் பழங்குடியினர்

ஹஸ்பர் ஏ ஹலீம்









இலங்கை நாட்டில் பல்லின மக்கள் வாழ்கின்ற போதும் இன, மதம், மொழியால் வேறுபட்டாலும் பழங்குடி என்ற மக்களும் வாழ்கின்றார்கள். அந்தவகையில்தி, திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கிராமமே சந்தனவெட்டை கிராமம். இக்கிராமத்தில் அதிகமான பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். மூதூர் நகரில் இருந்து தொலைவில் அமையப் பெற்ற இக்கிராம மக்கள் பல்வேறு பின்னடைவுகளுடன் வாழ்ந்து வருகின்றார்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள உரிமைகளாக காணப்படுகின்ற மனித அரசியல், சிவில் உரிமைகள் போன்றன இவர்களுக்கும் கிடைக்கப் பெறுவது அரிதாகவே காணப்படுகிறது.

இது தொடர்பான நிலையை கருத்திற்கொண்டு விழுது ஆற்றல் மையத்தின் ஏற்பாட்டில் ஓரங்கட்டப்பட்ட சமூகத்திற்கான "இளையோரின் குரல்" என்ற தொனிப்பொருளின் கீழ் நடமாடும் சேவையொன்று கடந்த 21ஆம் திகதியன்று குறித்த கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்க கட்டிடத்தில் இடம் பெற்றது.

பழங்குடி மக்களது ஜீவனோபாயமானது மிகவும் பின்னடைந்துள்ள நிலையில், சமூகமயமாக்கப்படாமை அம்மக்கள் அதற்குள் செய்வதறியாது தடுமாறுகின்றனர்.

அரச சேவையைப் பெறுவது முதல் பல இன்னோரன்ன சட்ட ரீதியான ஆவணங்களைப் பெற முடியாது வாழ்கின்றார்கள். இது தவிரப் பல விழிப்புணர்வற்ற நிலை காரணமாக பல்வேறு சமூகப் பிரச்சினைகளும் அங்கு இருந்து வருகின்றது. பெண்கள் சிறுவர்கள் பாதுகாப்பின்மை,கல்வி,மந்த போசனை,பால் நிலை சார்ந்த பல பிரச்சினைகளைத் தீர்க்கவும் சேவை வழங்குநர்களையும் வசப்படுத்தக்கூடிய வளங்களை இணைப்பு செய்ய கூடியதுமாகக் குறித்த நடமாடும் சேவை முன்னெடுக்கப்பட்டது.

அன்றைய நடமாடும் சேவையில் சம்பூர் பொலிஸ் நிலைய குற்றவியல் பிரிவு உத்தியோகத்தர்கள், மூதூர் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக பதிவாளர் கிளை மற்றும் சிறுவர் நன்னடத்தை பிரிவு, உத்தியோகத்தர்கள் மதஸ்தல உறுப்பினர்கள், கிராம அபிவிருத்தி சங்கங்களின் உறுப்பினர்கள் என பலரது ஒத்துழைப்புக்களோடு இடம் பெற்றதோடு பிறப்பு, அடையாள அட்டை மற்றும் விவாக பதிவு போன்றன அம்மக்களுக்கான சேவைகளாகத் திறம்பட இடம் பெற்றது.

ஆரம்பக் கட்டமாகப் பிள்ளையின் பிறப்பு முதல் பிறப்பு சான்றிதழ் கூட பலருக்கு இல்லாத நிலை இங்குக் காணப்படுகிறது. இளவயது திருமணம் அதிகரித்தும் காணப்படுகிறது. இது போன்ற

> **சந்தனவெட்டை கிராமத்தில் பல வருட காலமாக அடையாள அட்டை இன்றி இருந்த நான், இந்த நடமாடும் சேவை மூலமாக விண்ணப்பித்துள்ளேன். இதன் மூலம் அடையாள அட்டை கிடைக்கும் என நம்புகிறேன்**

விளிம்பு நிலை மக்களின் துயர் துடைக்கப் பழங்குடி என்கின்ற மக்கள் என்பதை ஒதுக்காது சேவைகளை வலுப்பெறச் செய்ய வேண்டும் என்பதே அம்மக்களின் எதிர்பார்ப்பாகக் காணப்படுகிறது.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சுகாதார சீர்கேடு உட்பட ஆரோக்கியமான வாழ்வு தொடர்பான விழிப்புணர்வும் இதன்போது இடம்பெற்றதுடன், குடும்ப நல உத்தியோகத்தர் பிரவீனாவால்இளவயது திருமணம், இளவயதில் கர்ப்பம் தவிர்த்தல், மந்த போசாக்கு போன்ற பல விடயங்களை அணுகுவதற்கு தங்களது களவிஜயத்தின்போது பெற்றார்கள் தங்களை அணுகுவதும் குறைவாகக் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

இதுதவிர, பாடசாலை இடைவிலகல் போன்றனவும் கல்வியில் பல பின்னடைவுகளை ஏற்படுத்துகிறது. பல தரப்பட்டவர்களுக்கான பிறப்பு சான்றிதழ் அற்ற நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். இவ்வாறான நிலை இனிமேலும் இருக்கதக்கவாறான சேவை அம்மக்களுக்கு கிடைக்க வேண்டும். ஒவ்வொரு பிரஜைக்கும் உள்ள உரிமை அம்மக்களுக்கும் கிடைக்க வழிசெய்ய வேண்டும். இதற்காக துறைசார் அரச நிறுவனங்கள் முன்வர வேண்டும். இக்கிராம மக்களின் உட்கட்டமைப்பு வசதிகள் தொடக்கம் பல வீதிகள் உட்பட அபிவிருத்திகளிலும் புறக்கணிப்பு செய்யப்படுவதாக அம்மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஏனைய சமூகத்துடனான உறவாடல் இன்றிய நிலையில், பழங்குடி என்ற நிலைக்குள் வாழ்க்கை நடத்தினாலும், இம்மக்களின் சகல உரிமைகளும் சுதந்திரங்களுடனும் வாழ வைக்க வேண்டும். பல்வேறுபட்ட இக்கட்டான சூழ்நிலையில் இம்மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது. நாட்டில் ஏற்பட்ட அண்மைய பொருளாதார நெருக்கடி உட்பட தற்போது வரை பல கஷ்டங்களுடன் இம்மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். "பல வருட காலமாக அடையாள அட்டை இன்றி இருந்த நான் தற்போது இந்த நடமாடும் சேவை மூலமாக விண்ணப்பித்துள்ளேன். இதன் மூலம் அடையாள அட்டை கிடைக்கும் என நம்புகிறேன். இது தொடர்பில் முன்னர் எப்படி பெறுவது என்று தெரியாமலும் இருந்தது. எனவே, இந்த விழுது நிறுவனத்துக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்" என நடமாடும் சேவையின் மூலம் பயனடைந்த கிராமவாசி ஒருவர் தெரிவித்தார்.

வளங்களை இணைப்புச் செய்வதன் மூலமும் மக்களுக்கான அரச சேவைகளைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்பதை விழுது போன்ற இளையோருக்கான குரல் எடுத்துக்காட்டியுள்ளது. மக்கள் பிரச்சினைகளை சமுதாய நிறுவனங்கள் இணைந்து கூட்டாகத் தீர்க்க முயற்சி எடுக்க முடியும். அதுபோன்ற கட்டமைப்புக்களை இக்கிராமத்தில் வலுப்படுத்த வேண்டும். கிராம அபிவிருத்தி சங்கம், மகளிர் அபிவிருத்தி சங்கம் உட்பட பல அமைப்புக்களின் வலுவூட்டல் மூலமாக மக்களை விழிப்புணர்வுள்ளவர்களாக மாற்றியமைத்து அவர்களது உரிமைகளுக்குச் செவிமடுத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகக் காணப்படுகிறது.

"பலருக்கு இந்த கிராமத்தில் பிறப்புச் சான்றிதழ் இல்லை. இதன் மூலமாகக் கிடைக்கும் என நம்புகிறேன். இது போன்று இன்னும் பல சேவைகளை இங்கு செய்ய வேண்டும் எனவும் எதிர்பார்க்கிறோம்" என நடமாடும் சேவையில் கலந்து கொண்ட பெண் ஒருவர் தெரிவித்தார். தங்களது தேவை கருதி மூதூர் நகருக்குச் செல்வதாயின் பல கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டும் என்பதுடன், சீரான போக்குவரத்து வசதியின்மையும் காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில், சிறுபான்மை இன தமிழ் பேசும் மக்களுக்கான உரிமைகள் சரியாக சமமாக மதிக்கப்பட்டு செயற்படக்கூடியவாறு இருக்க வேண்டும்.

இம்மக்களின் வாழ்வும் ஏனைய மக்களின் வாழ்வும் வித்தியாசமானது இது தொடர்பில் தேவை நலன் கருதி துரிதமான சேவைகளை அம்மக்கள் எதிர்பார்த்துக்காத்து நிற்கின்றனர்.



# சொல்லாத கதை

தெட்சணாமூர்த்தி கரிதரன்
(சம்பூர் சமரன்)
திருகோணமலை



இரவில் வீட்டின் நடுவிறாந்தையில் சோபாவின் மீது இருந்து கொண்டு நல்லம்மாபாட்டி ஒரு பயிற்சி புத்தகத்திலே ஏதோ எழுதிக் கொண்டே இடையிடையே தனது இளைய மகளின் பிள்ளைகளின் விளையாட்டுக்களை இரசித்த வண்ணம் இருந்தாள். நல்லம்மாபாட்டி மனதில் ஏதோ இனம்புரியாத கலக்கம் இருந்தது. அது அவள் முகத்தில் பிரதிபலித்துக் கொண்டே இருக்கும். யாராவது கேட்டால் 'என்னோட பேச்சை யார் தான் கேப்பாங்க' என்று சொல்லிக்கொள்வாள். நல்லம்மாபாட்டிக்கு இப்போது 72 வயதாகிறது. ஆனாலும், நல்ல சுறுசுறுப்புடனும் உடல் ஆரோக்கியத்துடனும் இருந்தாள் நல்லம்மாபாட்டிவக்கு மூன்று பிள்ளைகள், முதல் பிள்ளை வெளியூரில் அரசாங்க வேலை பார்க்கிறான். மற்றையது இரண்டும் பெண் பிள்ளைகள் கடைசி மகள் விமலாவின் வீட்டில்தான் தற்போது தனது வாழ்நாளை கழித்து வருகின்றாள். விமலாவிற்கு இரண்டு பிள்ளைகள் அப்பிள்ளைகளுடன் தனது கடைசிக் காலத்தை கழித்து விட எண்ணியிருந்தாள். தனது பேரப்பிள்ளைகள் மீது அவள் அளவில்லாத அன்பு வைத்திருந்தாள்.

> **தொலைபேசி பாவனையால் குழந்தைகள் சிந்திக்கும் ஆற்றலையும், உறவுகளின் தாற்பரியத்தையும் உணராமல் ஒரு கணினி மயமான பிள்ளைகளாக மாறுவது உறுதி**

தனது பிள்ளைகளை எப்படி அறிவுரை புகட்டி வளர்த்தாளோ அவ்விதமே அவர்களை வளர்க்க நினைத்தாள்.

1990களில் இடம்பெற்ற உள்நாட்டு அசாதாரண சூழ்நிலை காரணமாக தனது வாழ்வாதாரமாக இருந்த பலசரக்கு கடையையும் மற்றும் வாழ்விற்கு ஆதாரமாக இருந்த தன் கணவனையும் இழந்த பின்னர் மிகுந்த சிரமத்தின் மத்தியில் தனது பிள்ளைகளை படிக்கவைத்து மூத்த மகனை அரசாங்க வேலை கிடைக்கும் வரை கஷ்டப்பட்டு விட்டாள். இப்போது மூன்று பிள்ளைகளுக்கும் திருமணம் செய்து கொடுத்து விட்டாள். எஸ்.எஸ்.சி வரை படித்த நல்லம்மா, தனது பலசரக்கு கடையில் முன்னர் கணக்கு வழக்குகளை பார்ப்பதோடு நன்றாக வியாபாரமும் செய்வாள். ஆனால், கணவன் இறந்த பின்பு மீண்டும் ஒரு கடையை போட்டு தனியாகவே கஷ்டப்பட்டாள். இடையிடையே பிள்ளைகளும் அவளுக்கு உதவியாக இருந்தார்கள். நல்லம்மா நிறைய கதைகளை தனது பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுப்பாள். அது பொழுதுபோக்காகவும் அறிவுரை தருவதாகவும் இருந்தன. படித்தவள் என்பதால் பாடசாலைப் படிப்பை விடவும் வீட்டுப் பாடத்தைப் பிள்ளைகளுக்கு கவனமாக சொல்லிக் கொடுத்தாள். நல்லம்மாபாட்டி சொல்லும் கதைகள் சுவாரசியமாக இருக்கும். இரவில் உறங்கும் போதும் கூட கதை சொல்லியே பிள்ளைகளை உறங்க வைப்பாள்.

இன்றைய நவீன யுகத்தில் பாட்டி சொல்லும் கதையைக் கேட்க பிள்ளைகளுக்கு நேரம் இருப்பதில்லை. அதிலும் இன்று அதிகரித்த கையடக்கத்தொலைபேசி பாவனை குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை அனைவரையும் ஆட்கொண்டு விட்டது. விசேடமாக சிறுவர்கள் அதில் உள்ள விளையாட்டு செயலிகளையே அதிகம் விரும்பி விளையாட ஆர்வம் காட்டுகின்றார்கள். அவ்வாறு ஆர்வம் காட்டுவதற்குக் காரணம் அவர்களின் பெற்றோர்கள் தங்களின் நேரத்தை மிச்சப்படுத்தவும் குழந்தைப் பராமரிப்பை இலகுபடுத்துவதற்காகவும், குழந்தைகளிடம் தொலைபேசியை கொடுத்து குழந்தைகள் அழுவதையோ அல்லது குறும்புகள் செய்வதையோ தவிர்த்து விடுகின்றனர். இதனால் எதிர்கால தலைவர்களான குழந்தைகள் சிந்திக்கும் ஆற்றலையும், உறவுகளின் தாற்பரியத்தையும் உணராமல் ஒரு கணினி மயமான பிள்ளைகளாக மாறுவது உறுதி.

நல்லம்மாபாட்டி தனது பேரப்பிள்ளைகளைத் தூக்கிக் கொஞ்சுவது மட்டுமன்றி, தனது அனுபவத்துடனான கதைகளையும் சொல்லுவாள். நல்லம்மாபாட்டி கதை சொல்லும் போது பேரப்பிள்ளைகள் இரண்டு பேருமே அவளின் மடியின் மீது இருந்துதான் அதனைக் கேட்பார்கள். சில சமயங்களில் 'கதை வேண்டாம் பாட்டி' என்று சொல்லிக் கொண்டு விளையாட ஓடி விடுவார்கள். அந்த சமயங்களில் விமலாவின் கணவர், பிள்ளைகள் வீட்டிற்கு வெளியே சென்று விளையாடுவதைத் தவிர்க்கும் நோக்கத்துடன் தனது கையடக்கத் தொலைபேசியில் உள்ள விளையாட்டு செயலியைத் திறந்து கொடுப்பார்.

இரண்டு பிள்ளைகளும் ஆர்வமாக அதனை வாங்கி விளையாடுவார்கள். இப்படியே நாட்கள் செல்லச் செல்லப் பிள்ளைகள் நல்லம்மாபாட்டியிடம் கதை கேட்பதில் பிள்ளைகள் ஆர்வம் காட்டுவதில்லை. 'பாட்டி உங்கள் கதையை விட அப்பா போன்ல இருக்கற கேம் விளையாடுகிறது நல்லாயிருக்கு, இனி கதை சொல்ல வேண்டாம்' என்று பிள்ளைகள் நல்லம்மாவிடம் கூறுவதோடு பாட்டியிடம் இப்பொழுது சரியாக பேசுவதில்லை. அதிக நேரம் தங்கள் அப்பாவின் தொலைபேசியுடன் தான் இருப்பார்கள். இதனால் நல்லம்மா தன் இறுதிக் கட்ட வாழ்நாட்கள் இப்படியானதே என கவலை அடையத் தொடங்கி விட்டாள். அவள் பிள்ளைகளுக்காக சொல்லவிருந்த கதைகளை அவர்களுக்குச் சொல்ல முடியாமையால் மிகுந்த மனவேதனை அடைந்தாள். தான் தனித்துப் போனதாக உணர்ந்தாள். தன் மனப்புத்தகத்திலுள்ள பக்கங்கள் புரட்டப்படாமல் போய்விட்டதை நினைத்து வருந்தினாள். விமலாவின் பிள்ளைகள் வேண்டும் என்றே அவ்வாறு செய்யவில்லை, எது? நல்லது எது? கெட்டது என அறிந்து கொள்ளும் பருவமும் பக்குவமோ அவர்களுக்கு இல்லை.

நல்லம்மா தன் பேரப்பிள்ளைகளுக்கு கதை சொல்லும் நேரங்களில் இப்போதெல்லாம் ஒரு பயிற்சி புத்தகத்தில் ஏதோ எழுதிக் கொண்டிருப்பாள்.

இப்படியே அடிக்கடி எழுதுவாள் நாட்கள் நகர நகர நல்லம்மாவின் முதுமை நிலையம் மனவருத்தமும் முந்தைய சுறுசுறுப்பை அவளுக்குக் கொடுக்கவில்லை. இதனால் படுக்கையில் கிடக்க வேண்டிய நிலைக்கு ஆளானாள். விமலா தனது தாயை நன்றாகக் கவனித்துக் கொண்டாலும் தாயின் குழப்பமான மனநிலையை அறிய முடியவில்லை. நல்லம்மாள் தன் பேரக்குழந்தைகள் தன்னை விட்டு பேச்சளவிலும், மனதளவிலும் வெகுதூரம் சென்று விட்டார்கள், தனது கதையைக் கேட்க விரும்பவில்லை என்று தினமும் மனதுக்குள் துடித்துக் கொண்டிருந்தாள். இதனால் உடல்நிலை மேலும் மோசமாகியது. ஆனாலும், அவள் பயிற்சி புத்தகத்தில் எழுதுவதை நிறுத்தவில்லை. இப்பொழுது தளர்வடைந்து விட்டாள் நடுங்கிய கைகளினால் கிறுக்கலாகவே எழுத முடிந்தது.

அன்று காலையில் அம்மாவிற்கு தேநீர் கொடுப்பதற்காக தன் தாயை எழுப்பினாள். ஆனால் நல்லம்மா எழும்பவில்லை. அசைவற்ற உடலாகப் படுத்திருந்தாள். நல்லம்மாவின் அருகே சென்று விமலா சத்தமாக அழைத்தாள். எவ்வித அசைவுமில்லை, பதட்டத்துடன் அருகே வந்து கையின் நாடியைப் பிடித்துப் பார்த்தாள். ஆம், உயிர் பிரிந்துவிட்டது அம்மா! அம்மா! என்று அலறி துடித்தாள். கண்ணீர் மழை பொழிந்தாள். அந்த சத்தம் கேட்ட விமலாவின் கணவரும் அங்கு ஓடி வந்தார். அவரும் ஸ்தம்பித்துப் போய்விட்டார்.

> **பிள்ளைகளுக்காக சொல்லவிருந்த கதைகளை அவர்களுக்குச் சொல்ல முடியாமையால் மிகுந்த மனவேதனை அடைந்தாள். தான் தனித்துப் போனதாக உணர்ந்தாள்**

இருவரின் கண்களும் கண்ணீர்க் கடலாகின. அச்சமயம் நல்லம்மாவின் தலையணை அருகில் இருந்த பயிற்சி புத்தகம் விமலாவின் கண்ணில் திடீரென பட்டது. அதை எடுத்து அதன் முதல் பக்கத்தைப் புரட்டிப் பார்த்தாள். 'கேட்காத கதைகள்' என்று தலைப்பிடப்பட்டு திகதி போட்ட வண்ணம் நிறையக் கதைகள் எழுதப்பட்டு இருப்பதைக் கண்டாள். அருகே நின்று கொண்டிருந்த விமலாவின் கணவரும் அதனை வாங்கிப் பார்த்தார். கண்ணீர் கண்களைக் கடந்து வழிந்தது. தங்களது அறியாமையை நினைத்து தலையில் அடித்து அழுதார்கள். நல்லம்மாவின் பேரப்பிள்ளைகளும் அதனை வாங்கி பார்த்தாலும் அவர்களுக்கு அது உணரும் படியாக இருந்திருக்காது. ஆனாலும் அது முன்னர் கேட்காத கதையாகவே இருந்தது. அது நல்லம்மாவின் காதுகளுக்கும் அப்போது கேட்காத கதையாகவே இருந்தது.

ஜெனிவா

மதுபானங்களுக்கு

# அதிக வரி விதிக்க வேண்டும்




மதுபானங்கள் மற்றும் சர்க்கரை இனிப்பு பானங்கள் மீதான வரிகளை அதிகரிக்க உலக நாடுகளை உலக சுகாதார அமைப்பு வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக உலக சுகாதார அமைப்பு கூறியதாவது,

"ஆரோக்கியமற்ற பொருட்கள் மீதான சராசரி உலகளாவிய வரி வீதம் குறைவாக உள்ளது. வரிகளை உயர்த்துவது ஆரோக்கியமான மக்கள்தொகைக்கு வழிவகுக்கும். மதுபானங்கள் மற்றும் சர்க்கரை-இனிப்பு பானங்களுக்கு அதிக கலால் வரி விதிக்கப்பட வேண்டும். மது அருந்துவதால் ஆண்டுக்கு 26 இலட்சம் மக்கள் உயிரிழக்கின்றனர்.

80 இலட்சத்துக்கு அதிகமானோர் ஆரோக்கியமற்ற உணவை உட்கொள்வதால் உயிரிழகின்றனர். மதுபானங்கள், சர்க்கரை-இனிப்பு பானங்கள் மீதான வரியை அமுல்படுத்துவது இந்த இறப்புகளைக் குறைக்கும்.

இது இந்த தயாரிப்புகளின் பயன்பாட்டைக் குறைக்க உதவுவது மட்டுமல்லாமல், ஆரோக்கியமான தயாரிப்புகளை உருவாக்க நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கும். ஆரோக்கியமற்ற பொருட்களுக்கு வரி விதிப்பது ஆரோக்கியமான மக்களை உருவாக்குகிறது. மதுபான விடயத்தில், வன்முறை மற்றும் வீதி போக்குவரத்து பாதிப்புகளைத் தடுக்கவும் வரி உதவுகிறது. மதுபானங்கள் தொடர்ந்து மலிவு விலையில் வருவது கவலை அளிக்கிறது" என தெரிவித்துள்ளது.




நியூசிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# 172 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த பங்களாதேஷ்

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், மிர்பூரில் நேற்று ஆரம்பித்த இரண்டாவது டெஸ்டில் தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

பங்களாதேஷ்: 172/10

(துடுப்பாட்டம்: முஷ்பிக்கூர் ரஹீம் 35, ஷடாட் ஹொஸைன் 31, மெஹிடி ஹஸன் மிராஸ் 20 (42) ஓட்டங்கள். பந்துவீச்சு: கிளென் பிலிப்ஸ் 3/31, மிற்செல் சான்ட்னெர் 3/65, அஜாஸ் பட்டேல் 2/54, டிம் சௌதி 1/0)

சென்னை

# மோடியிடம் ரூ.5,060 கோடி கேட்டு ஸ்டாலின் கடிதம்



'மிக்ஜாம்' புயல் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், இடைக்கால நிவாரணமாக ரூபாய் 5,060 கோடி வழங்குமாறு பிரதமர் மோடிக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அதில், "தமிழ்நாட்டில் கடந்த 2, 3 மற்றும் 4 ஆகிய திகதிகளில் தாக்கிய 'மிக்ஜாம்' புயலால் பெய்த வரலாறு காணாத பெருமழையின் காரணமாக, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய நான்கு மாவட்டங்களில் மிக அதிகமான மழை பெய்தது.

இதன் காரணமாக, இந்த நான்கு மாவட்டங்களில், குறிப்பாக சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மிகக்கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

சாலைகள், பாலங்கள், பொது கட்டடங்கள் என பல்வேறு உட்கட்டமைப்புகள் சேதம் அடைந்துள்ளன. மேலும், இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது என தெரிவித்து, ரூ. 5,060 கோடியினை உடனடியாக வழங்க வேண்டும்" என கடிதத்தில் கோரியுள்ளார்.

இங்கிலாந்து



# இந்த ஆண்டின் சிறந்த வார்த்தையாக 'RIZZ'

ஒக்ஸ்போர்ட் (Oxford) ஆங்கில அகராதியை வெளியிடும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக அச்சகம், 2023ஆம் ஆண்டிற்கான சிறந்த வார்த்தையாக ரிஸ் (Rizz) என்ற வார்த்தையை தெரிவு செய்துள்ளது.

சிறந்த வார்த்தை தெரிவுக்காக இறுதியாக பட்டியலிடப்பட்ட 8 வார்த்தைகளில் இதுவும் ஒன்றாகும். இந்த 8 வார்த்தைகளும், 2023இல் மக்களின் மனநிலை, ஆர்வம் மற்றும் அக்கறைகளை பிரதிபலிக்கும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டன. இவற்றில் சிறந்த வார்த்தையாக ரிஸ் தேர்ந்தெடுக்கப்பட்டது. இதற்கான இறுதி முடிவை எடுப்பதற்கு முன்பு, ஒக்ஸ்போர்ட் அகராதியியலாளர்கள் பொது வாக்கெடுப்பு நடத்தினர்.

நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் அரட்டையடிப்பதில் அல்லது ஊர் சுற்றுவதில் நீங்கள் ஆர்வம் உள்ளவரா? அப்படியானால், உங்களுக்குத் தெரிந்திருக்காவிட்டாலும், இந்த ரிஸ் என்ற வார்த்தையை பயன்படுத்தியிருக்கலாம். காதலை வெளிப்படுத்துதல் அல்லது கவர்ச்சிக்கான இணைய மொழியாக பெரும்பாலும் இளைஞர்களால் இந்த வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. கடந்த 12 மாதங்களில் இந்த வார்த்தை அதிக அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ரிஸ் என்ற வார்த்தைக்கு ஒக்ஸ்போர்ட் அகராதி விளக்கம்: ஸ்டைல், வசீகரம் அல்லது கவர்ச்சி; காதல் அல்லது பாலியல் துணையை ஈர்க்கும் திறன். சுருக்கமாக, இது 'கரிஸ்மா' (charisma) என்ற வார்த்தையின் மையப்பகுதி.

ரிஸ் என்பதை ஒரு வினைச்சொல்லாகவும் (Verb) பயன்படுத்தலாம். அதாவது யாரையாவது கவர்ந்திழுப்பது, மயக்குவது அல்லது அரட்டையடிப்பதற்கான வாக்கியத்தில் "to rizz up" போன்ற சொற்களை பயன்படுத்தலாம்.

ராஜஸ்தான்



# 2ஆம் தாரத்தை தயார் செய்யும் முதல் தாரம்

தொழில்நுட்ப வளர்சிக்கு ஏற்ப உலகம் மிக வேகமாக முன்னேறி வருகிறது. மக்களின் உணவு, உடை மற்றும் பழக்கவழக்கங்கள் காலத்திற்கு ஏற்ப மாறிக்கொண்டே வருகிறது. இப்படி ஒருபுறம் உலகம் மாற்றத்தின் பாதையில் சென்றுக்கொண்டிருந்தாலும் சில சமூகத்தை சேர்ந்தவர்கள் தங்கள் மரபுகளை பின்பற்ற தவறுவதில்லை.

இந்தியாவில் ஒரு திருமணம் மட்டுமே சட்டப்பூர்வமாக உள்ள நிலையில், ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சல்மேரில் உள்ள ராம்தேவ் கிராமத்தில் ஒவ்வொரு ஆண்களும் இரண்டு திருமணங்கள் செய்துக்கொள்கின்றனர்.

பொதுவாக தனக்கு போட்டியாக இன்னொரு பெண் வந்தால் எந்த பெண்ணுக்கும் பிடிக்காது. ஆனால் இந்த கிராமத்தில், முதல் மனைவி தனது கணவனின் இரண்டாவது மனைவியை வரவேற்பதிலிருந்து திருமணத்துக்கு தேவையானதை தயாரிப்பது வரை, அனைத்தையும் செய்கிறார்.

ஒரே ஆணை திருமணம் செய்துக்கொள்ளும் இந்த இரண்டு பெண்களும் ஒரே குடும்பத்தில் சகோதரிகளை போல வாழ்வார்கள் அவர்களுக்குள் சண்டையே வருவதில்லை என்று அங்குள்ள மக்கள் கூறுகின்றனர்

இப்படி வித்தியாசமான பழக்கம் மட்டுமன்றி அதற்கு ஒரு வித்தியாசமான காரணத்தையும் கூறுகின்றார்கள்.

இந்த கிராமத்தை பொறுத்த வரை முதலில் திருமணம் செய்துக்கொள்ளும் பெண்ணுக்கு குழந்தை பிறக்காது என்பது ஐதீகம். அப்படியே குழந்தை பிறந்தாலும் அது பெண் குழந்தையாக தான் பிறக்கும் என்பதால் ஒவ்வொரு ஆணும் இரண்டாவது திருமணம் செய்துக்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

காலம் காலமாக இந்த முறை பின்பற்றப்பட்டு வந்தாலும் தற்போது இந்த கிராமத்தை சேர்ந்த இளைஞர்கள் இந்த வழக்கத்தை எதிர்க்க தொடங்கியுள்ளனர். மேலும் ஏழை பெண்களில் இயலாமையை சில ஆண்கள் தங்கள் சொந்த நலனுக்காக பயன்படுத்திக்கொள்ள இத்தகைய நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருவதாகவும் சிலர் தெரிவிக்கின்றனர்.



# பீலிக்ஸை தக்க வைக்க எதிர்பார்க்கும் பார்சிலோனா

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் முன்களவீரரான ஜோவா பீலிக்ஸை கடனடிப்படையிலேயே அக்கழகம் கைச்சாத்திட்டிருந்த நிலையில், அதை தற்போது நீடிக்க எதிர்பார்த்துள்ளது.

24 வயதான பீலிக்ஸின் பெறுபேறுகளில் பார்சிலோனா திருப்திப்பட்ட நிலையிலேயே அவரைத் தற்போது நிரந்தரமாகக் கைச்சாத்திட அக்கழகம் எதிர்பார்த்துள்ளது.



# நிந்தவூர் இம்ரானை வென்ற சாய்ந்தமருது பிளாஸ்டர்

■ அஸ்ஹர் இப்றாஹீம்

சாய்ந்தமருது ஸஹிரியன் விளையாட்டுக் கழகம் நடாத்தும் 17 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான இருபதுக்கு-20 கிரிக்கெட் தொடரில், சாய்ந்தமருது பொலிவேரியன் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற நிந்தவூர் இம்ரான் விளையாட்டுக் கழகத்துடனான போட்டியில சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகம் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பிளாஸ்டர் 18 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இம்ரான் 12.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 76 ஓட்டங்களையே பெற்றது.

போதிய வெளிச்சமின்மை காரணமாக இம்ரானின் ஓட்ட எண்ணிக்கையானது மாற்றியமைக்கப்பட்ட நிலையில், டக்வேர்த் லூயிஸ் முறையில் பிளாஸ்டர் 49 ஓட்டங்களால் வெற்றி பெற்றதாக நடுவர்கள் அறிவித்தனர்.

# நியூகாசில் செல்லும் கல்வின் பிலிப்ஸ்?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான நியூகாசில் யுனைட்டெட்டானது, இன்னொரு பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் கல்வின் பிலிப்ஸைக் கைச்சாத்திடுவதை இலக்கு வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

தமது மத்தியகளவீரரான சன்ட்ரோ டொனாலியால் சூதாட்டத் தடை காரணமாக அடுத்தாண்டு ஓகஸ்ட் மாதம் வரைக்கும் விளையாட முடியாதென்ற நிலையிலேயே அவரின் பிரதியீடாகவே 28 வயதான பிலிப்ஸை நியூகாசில் நோக்குகிறது.



# மெஸ்ஸியுடன் இணையும் சுவாரஸ்

ஐக்கிய அமெரிக்காவின் மேஜர் லீக் கால்பந்தாட்டக் கழகமான இன்டர் மியாமியில் இணைவதை ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவின் முன்னாள் முன்களவீரரான லூயிஸ் சுவாரஸ் நெருங்கியுள்ளார்.

அந்தவகையில், பார்சிலோனாவில் தன்னுடன் முன்களவீரராக முன்னர் இருந்த லியனல் மெஸ்ஸியுடன் 36 வயதான சுவாரஸ் இணையவுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 07, டிசெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.